**Publication :** Dina Malar

**Region :** Coimbatore

**Date :** Jan 07, 2011

# குழந்தைகள் கற்கும் திறன்: பெற்றோருக்கு பயிற்சி

கோவை, ஜன. 7-

குழந்தைகளின் கற்கும் திறன் பற்றிய பெற்றோருக்கான பயிற்சிப் பட்டறை, 'ஐ டிஸ்கவர்' சார்பில் வரும் 9ம் தேதி நடக்கிறது.

'ஐ டிஸ்கவர்' நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஆஷிஷ்ராஜ்பால் கூறியதாவது:

பார்த்தல், கேட்டல், படித்தல், செயல்படுதல் என நான்கு விதங்களில் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றன. இவற்றில் எந்த சூழ்நிலையில் குழந்தைகள் அதிகம் கற்றுக்கொள்கின்றன என்பதை ஆராய்ந்து, அதன்அடிப்படையில்தான் கற்பிக்க வேண்டும் என்பதை ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கிறோம்.

குழந்தைகளுக்கு கற்பிக்க நாங்கள் பிரத்யேகமான பாடத்திட்ட வடிவமைப்பை 'எக்ஸீட்' என்ற பெயரில் வழங்குகிறோம். வகுப்பறையில் பாடங்களை எப்படி சொல்லித்தருகின்றனர்; வகுப்பை திறம்பட நிர்வகிப்பது பற்றி ஆசிரியர்களுக்கு போதிய பயிற்சி இல்லை. அதை எக்ஸீட் சமன் செய்கிறது. இம்முறையில் கற்கும் குழந்தைகள் பெற்றோரையும், ஆசிரியர்களையும் கேள்விகள் கேட்டு கற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் பெறுகின்றன.

எதிர்காலக் கல்வி முறை பற்றி பெற்றோருக்கு விழிப்புணர்வு இல்லை. பெற்றோருக்கு இது தொடர்பான, 'சில்ரன்ஸ் ஆப் டுமாரோ' பயிற்சிப்பட்டறை வரும் 9ம் தேதி கோவை 'ரத்னா ரீஜன்ட்' வளாகத்தில் நடக்கிறது. அங்கு குழந்தைகளுக்கு சிறு தேர்வுகள், செயல்முறைகளைக் கற்பித்து, அவர்களின் கற்கும் திறன் பற்றி பெற்றோருக்கு அறிவுறுத்துவோம். கற்பித்தலில் பெற்றோர் பங்களிப்பு பற்றிப் புரிய வைப்போம்; ஏழு விதமான ஆலோசனைகள் வழங்கப்பட உள்ளன. தேர்ந்தெடுத்த பெற்றோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, ஆஷிஷ்ராஜ்பால் தெரிவித்தார்.